# <u>சாதாரணக்கூட்டம்</u>

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2018 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

**<u>பொருள் : 1</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்:12981/2018/இ3 நாள்:27.06.2018 ஆம் தேதியிட்ட கடிதத்தில், பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP 18-19) 2018–2019ன் கீழ் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் இரண்டு தார்சாலைகள் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.38 கோடியும், மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மானிய நிதி ரூ.0.90 கோடியும், மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி ரூ.0.42 கோடி மற்றும் நகராட்சி பங்களிப்பு ரூ.0.30 கோடி என நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி வரப்பெற்ற கடிதம் தனி அலுவலரின் பார்வைக்கும், தீர்மானம் நிறைவேற்றி நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பல்லடம் நகராட்சி வார்டு எண்:02,03,07,08,10,12,13,14,18ல் உள்ள சேடபாளையம் பகவதியம்மன் நகர், அரிசன காலனி, தெற்குபாளையம் முதல் நாரணாபுரம் வரை, இராயர்பாளையம் மயானம் செல்லும் வழி, விநாயகர் கோவில் வீதி, பனப்பாளையம் பாவடித் தோட்டம், காளியப்பா நகர், சரஸ்வதி நகர், எஸ்.பி.டி. டெக்ஸ் ரோடு, முல்லை நகர், ராம் நகர், வளர்மதி சர்வீசன் ஸ்டேசன், ஏ.வி.எம். நகர், யுவராணி நகர் மற்றும் எஸ்.டி.எம் மில் ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த தார்சாலைகளை பேவர் மிசின் கொண்டு தார்சாலைகள் புதுப்பித்தல். (சிப்பம்–I) | 4.486 | 150.00 |
| 2 | பல்லடம் நகராட்சி வார்டு எண்: 11ல் உள்ள டி.எம்.எஸ் நகர், ஸ்ரீ நகர், ஆண்டாள் நகர், மகாலட்சுமி அவென்யூ, இன்ட்–ராயல் விலா, ஸ்கூல் ரோடு, திலீபன் நகர் ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த தார்சாலைகளை பேவர் மிசின் கொண்டு தார்சாலைகள் புதுப்பித்தல். (சிப்பம்–II) | 2.972 | 150.00 |
| | **மொத்தம்** | **7.458** | **300.00** |

(ந.க.எண்: 313 /2018/இ1)

<u>அலுவலககுறிப்பு:</u>

1. மேற்கண்ட பணியினை சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2018–2019ன் கீழ் அரசு மானியம் பெற்று பணி மேற்கொள்ள தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் : 2</u>

நிலவருவாய் ஆய்வாளர், பல்லடம் உள்வட்டம், பல்லடம் அவர்களின் கடிதத்தில் பல்லடம் கிராமம் புல எண் 310/20 காலையில் 0.02.0 பரப்பில் குடியிருந்து வரும் இரண்டு நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால் , இந்நகராட்சியால் ஆட்சேபனை ஏதாவது இருந்தாலும், இல்லை என்றாலும் கூட்ட நடவடிக்கையின் தீர்மானத்தினை வட்டாட்சியர் அலுவலகம், பல்லடத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட புல எண் 310/20 காலையில் உள்ள 0.02.0 பரப்பில் குடியிருந்து வரும் இரண்டு நபாக்ளுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க இந்நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்ற விபரத்தை வட்டாட்சியர் அலுவலகம், பல்லடத்திற்கு தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் 0444/2018/அ2)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் : 3</u>

நிலவருவாய் ஆய்வாளர், பல்லடம் உள்வட்டம், பல்லடம் அவர்களின் கடிதத்தில் பல்லடம் கிராமம் புல எண் 308/1 காலையில் 0.00.5 ஹெக்டர் நிலத்தினை இலவச வீட்டுமனை பட்டா வழங்க வண்டிப்பாதை புறம்போக்கினை நத்தமாக நிலம் மாற்றம் செய்து இலவச வீட்டு மனை பட்டா வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால், இந்நகராட்சியால் ஆட்சேபனை ஏதாவது இருந்தாலும், இல்லை என்றாலும் கூட்ட நடவடிக்கையின் தீர்மானத்தினை வட்டாட்சியர் அலுவலகம், பல்லடத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட புல எண் 308/1 காலையில் உள்ள 0.00.5 ஹெக்டர் நிலத்தினை இலவச வீட்டுமனை பட்டா வழங்க இந்நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்ற விபரத்தை வட்டாட்சியர் அலுவலகம், பல்லடத்திற்கு தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 0445/2018/அ2)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் : 4</u>

பல்லடம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் ஒழிக்கும் பொருட்டு இயக்குநர் , நோய் தடுப்பு மருந்து துறை அவர்களின் கடிதம் எண் 2227/எஸ்2 /2016 நாள் : 06.05.2016 இல்

தெரிவிக்கப்பட்டுள்ள படி நகராட்சிப்பகுதியில் டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு நகர மக்கள் தொகைக்கு ஏற்ப தற்காலிக கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை நியமனம் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

பல்லடம் நகராட்சியின் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 42243 ஆகும். தற்போது ஆண்டின் சராசரி மக்கள் தொகை ஏற்றம் 2 சதவிகிதம் ஆகும். இதன் அடிப்படையில் தற்போது பல்லடம் நகராட்சியின் மக்கள் தொகை சராசரியாக 45600 ஆகும். எனவே 45 தற்காலிக பணியாளர்களை (300 வீடுகளுக்கு 1 நபர் வீதம்) ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் 2018 மாதம் ரூ. 225/– வீதம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி விகிதப்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 3 மாதத்திற்கு நியமித்துக்கொள்ளவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,50,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. ( 374/2015/எச்1)

**<u>அலுவலககுறிப்பு :</u>**

இப்பணியானது மிகவும் அவசரம் அவசியம் என்பதாலும் பொது சுகாதார அவசியம் கருதியும் இந்நகர மக்களை டெங்கு காய்ச்சல் நோயிலிருந்து பாதுகாக்கவும், நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி, தனிஅலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும், அதற்காகும் செலவினத்திற்கும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் : 5</u>**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலின் கீழ் பயனாளிகள் பயன் பெறும் வகையில் . கீழ்காணும் பயனாளிகளை வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் பெயர் பட்டியலில் சேர்த்து BPL எண் வழங்ககோரி வழங்கிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் , பயனாளிகள் பட்டியல் தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பெயர் மற்றும் முகவரி | பாலினம் |
|---|---|---|---|
| 1 | 16 | வள்ளிநாயகி<br>க/பெ தட்ஷினாமூர்த்தி(லேட்)<br>9, ஜே.கே.ஜே காலனி<br>மாணிக்காபுரம் ரோடு<br>பல்லடம் | பெண் |
| 2 | 15 | திருமதி.அங்காத்தாள்<br>347, 5 வது வீதி<br>அண்ணா நகர்,<br>பல்லடம் | பெண் |

**அலுவலக குறிப்பு**
மன்றம் ஏற்கலாம்.
**<u>பொருள் : 6</u>**

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மத்திய மாநில மற்றும் நகராட்சி நிதி உதவியுடன் தனி நபர் கழிப்பிடம் கட்டுவதற்கு மீண்டும் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் தெரிவித்த அறிவுரையின் படி பல்லடம் நகரில் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் 13 வீடுகளில் தனிநபர் கழிப்பிடம் கட்ட இடவசதி உள்ளது என கண்டறியப்பட்டது.

இதற்கு தேவையான நிதி விபரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | மத்திய அரசின் பங்குத்தொகை<br>(ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.4000 /– வீதம் 13 க்கு) | ரூ.52,000 |
| 2 | மாநில அரசின் பங்குத்தொகை<br>(ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.2000 /– வீதம் 13 க்கு) | ரூ.26,000 |
| 3 | நகராட்சியின் பங்குத்தொகை<br>((ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.2000 /– வீதம் 13 க்கு) | ரூ.26,000 |

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் கட்ட மத்திய மாநில அரசுகளில் நிதி வேண்டிய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும், நகராட்சியின் பங்குத்தொகை ரூ.26,000 /- பொது நிதியிலிருந்து 13 பயனாளிகளுக்கு வழங்கவும் தனிநபர்கழிப்பிடம் 13 பயனாளிகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டிருப்பின் மத்திய அரசு (ம) மாநில அரசு பங்கு தொகையினையும் நகராட்சி பொது நிதியிலிருந்து முதலில் வழங்கப்பட்டு பின்பு மத்திய (ம) மாநில அரசின் பங்குத்தொகை வரப்பெற்றபின் அத்தொகையினை நகராட்சி நிதிக்கு மாற்றம் செய்து கொள்ளளும் படி நகராட்சி நிர்வாக ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி தொகையினை பயனாளிகளுக்கு வழங்க தனி அலுவலரின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1.தனிஅலுவலர்அனுமதிக்கலாம்.

2.பணியின் அத்தியாவசியம் கருதி பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மொத்த மானியத்தொகையினை நகராட்சிப்பொது நிதியிலிருந்து செலவு மேற்கொண்டு பின்னர் மத்திய மாநில அரசுகளிடமிருந்து வரும் மானியத்தொகையினை பொது நிதிக்கு வரவு வைத்துக்கொள்ளவும் தனி அலுவலரின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் : 7**

நகராட்சி நிர்வாக இணை ஆணையர், சென்னை அவர்களின் கூட்ட நடவடிக்கை கடித ந.க.எண்:38038/2012/யுபிஏ2 நாள்:19.05.2018 நாளிட்ட கடிதத்தில், NULM திட்டத்தின் கீழ் பல்லடம் நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகளின் உதவியார்கள் தங்கும் அறை கட்ட திட்ட அறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி அரசு மருத்துவமனை வளாகத்தில் 40 நோயாளிகளின் உதவியாளர்கள் அறை ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் 2000 சதுரஅடி(186 ச.மீ) அளவில் கட்டப்பட்டு, PAASAAM, ஈரோடு என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தினரைக் கொண்டு நிர்வகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்க தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 1702 /2016/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை NULM திட்டத்தின் கீழ் நிதி பெற்று மேற்கொள்ள தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 8**

பல்லடம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவு தனி மனைகளை வரன்முறைப்படுத்துதல் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்களின் தலைமையில் நடந்த ஆய்வுக்கூட்டத்தில் சிறப்பு முகாம் அமைத்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பல்லடம் வைஸ் திருமண மண்டபத்தில் நடைபெறும் முகாமில் சுமார் 3000 பேர் கலந்து கொள்வார்கள் என்பதால் பொதுமக்கள் பாதுகாப்பு கருதி சவுக்கு மரக்கட்டையை வைத்து தடுப்புகள் ஏற்படுத்தவும், ஆடியோ, மின்விளக்குகள், மின் பிளக்குகள், பிளக்ஸ் பேனர்கள் வைக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.0.75 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், பணியின் அவசரம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணியை மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139/2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணியை திரு.P.முருகன், ஒப்பந்ததாரர் அவர்களிடம் ஒப்படைப்பு பணியாக பணியை மேற்கொள்ள தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 9**

பல்லடம் நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகிக்கப்படும் பகுதிகளை நகர வரைபடத்தில் Zonation, DMA வாரியாக CAD Drawingல் தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, பணியை தனியார் நிறுவனத்திடம் மேற்கொள்ளுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.0.30 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், பணியை Isha Construction,பல்லடம் நிறுவனத்திடம் ஒப்படைத்து பணியை மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியை Isha Construction,பல்லடம் நிறுவனத்திடம் ஒப்படைப்பு பணியாக பணியை மேற்கொள்ள தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 10**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:07 திருப்பூர் சாலை இராயர்பாளையம் முதல் மகாலட்சுமி நகர் வரை நெடுஞ்சாலையின் மையத்தில் இருபக்க தெருவிளக்கு அமைக்கும் பணிக்கு சப்ளை செய்யப்பட்ட பொருட்களை மூன்றாம் நபர் ஆய்வு செஙயது அறிக்கை பெறுவதற்கு ஆய்வுக் கட்டணமாக ரூ.29,500/—ஐ "SGS India Private Limited" நிறுவனத்திற்கு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 117 /2017/இ1)

**அலுவலககுறிப்பு:** 1. அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 11**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக தெருவிளக்கு அமைக்க, புதிதாக அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்று மோட்டார் இயக்க, நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் போன்றவற்றில் புதிதாக மின் இணைப்பு பெறும் பணிக்கு செலுத்த வேண்டிய மதிப்பீடு கட்டண செலவுத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 12**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:03 கணபதி நகர், வார்டு எண்:14 கணபதி நகர் ஆகிய இரு பூங்கா இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தரம் பிரிக்கும் கூடங்களின் முன்பு நுண் உரமாக்குதல் மையம்(MCC) அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.50 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 13**

நகராட்சி எல்லைக்குள் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பொறியியல் பிரிவில் நிரந்தர பணியாளர்கள் இல்லை. மேலும் பொறியியல் பிரிவில் அலுவலக பணிகளை பார்க்க ஒரு இளநிலை உதவியாளர் மட்டுமே உள்ளார். 9 மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து வால்வுகளை இயக்கி குடிநீர் விநியோக பணிகள் செய்ய மற்றும் அலுவலக பணிகளை பார்க்கவும், குடிநீர் கசிவுகளை சரிசெய்ய பிட்டர் ஒருவர் என பொறியியல் பிரிவிற்கு தினசரி 15 நபர்கள் தேவைப்படுகிறது. இப்பணிகளை பொதுப்பணித்துறை தரப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல்படி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139/2018/இ1)

**அலுவலககுறிப்பு :**

1. மேற்கண்ட பணி ஒப்பந்தப்புள்ளி கோரி தனியாரிடம் ஒப்படைத்து மேற்கொள்ளலாம். மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 14**

நகராட்சி எல்லைக்குள் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு போர்வெல் நீர் விநியோகம் செய்ய பொறியியல் பிரிவில் நிரந்தர பணியாளர்கள் இல்லை. எனவே பொறியியல்

பிரிவிற்கு ஆழ்துளை கிணற்று மோட்டர்களை இயக்கி, 18 வார்டுகளுக்கும் சீரான நீர் விநியோகம் செய்ய 15 நபர்கள் தேவைப்படுகிறது. இப்பணிகளை பொதுப்பணித்துறை தரப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல்படி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139/2018/இ1)

**அலுவலககுறிப்பு :**

1. மேற்கண்ட பணி ஒப்பந்தப்புள்ளி கோரி தனியாரிடம் ஒப்படைத்து மேற்கொள்ளலாம். மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 15**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:01 முதல் 18 வரை உள்ள குடிநீர் விநியோக குழாய்கள், குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கான குழாய்கள்(போர்வேல் குழாய்கள்) போன்றவற்றில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய நகராட்சியில் போதிய அளவு பணியாளர்கள் இல்லை. எனவே தனியாரிடம் ஒப்படைத்து பணி மேற்கொள்ளும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 16**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:1 என்.எஸ்.பி நகர் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்ய புதியதாக பகிர்மான குழாய் மற்றும் மெயின் குழாய் பதிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 17**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:4 மங்கலம் சாலை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில் சாலையின் மேற்புறம் உள்ள மழைநீர் வடிகாலில் வரும் நீரை சாலையின் கிழபுறம் உள்ள மழைநீர் வடிகாலில் நெடுஞ்சாலை துறை சாலையை கடந்து இணைக்க வேண்டும்.எனவே சாலையின் குறுக்கே சிறுபாலம் கட்ட மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு கடிதம் அனுப்ப தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:** 1. அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 18**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:11 ஆண்டாள் நகரில் உள்ள தரம் பிரிக்கும் கூடம் (MCC) மையத்திற்கு Shreading மெசின், தள்ளுவண்டி, பிளாட்பாம் போன்ற இயந்திரங்கள் வாங்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 19**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:11 ஆண்டாள் நகரில் உள்ள தரம் பிரிக்கும் கூடம் (MCC) மையத்திற்கு சுற்றுச்சுவர், தண்ணீர் வசதி போன்றவை ஏற்படுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 20**

நகராட்சிக்கு சொந்தமான மாதப்பூர் கிராமத்தில் உள்ள உரக்கிடங்கிற்கு கம்பிவேலி அமைத்தல் பணிக்கு 06.06.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. திரு.P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.75% குறைவு |
| 2. திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.03% அதிகம் |

(ந.க.எண்: 139/2017/இ1)

**அலுவலக குறிப்பு :**

1. இப்பணிக்கு நகரமன்றம் தனது 30.05.2018 தேதியிட்ட 99 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரூ.10,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.75% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திரு.P.முருகன், ஒப்பந்ததாரா் அவா்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலா் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 21</u>**

பல்லடம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள டோனா்களுக்கு ரீ–பில் செய்தல், ரீ–கன்டிசன் செய்தல் மற்றும் கலா் பிரிண்டருக்கு புதிதாக டோனா்கள் சப்ளை செய்தல் பணிக்கு 15.06.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1.திருவாளா்கள்.ஸ்பைடா் டெக்னாலஜி, திருப்பூா். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.24% குறைவு |
| 2.திருவாளா்கள்.வீனஸ் டெக், சேலம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.69% அதிகம் |

(ந.க.எண்: 139/2017/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. இப்பணிக்கு நகரமன்றம் தனது 28.03.2018 தேதியிட்ட 69 ஆம் எண் தீா்மானத்தில் மதிப்பீடு ரூ.2,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.24% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திருவாளா்கள்.ஸ்பைடா் டெக்னாலஜி, திருப்பூா் நிறுவனம் அவா்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலா் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 22</u>**

வாா்டு எண்:10 சித்தம்பலம் சாலையில் ஏற்கனவே உள்ள கைப்பம்பு ஆழ்துளைக் கிணற்றில் புதியதாக மின்மோட்டாா் பொருத்தும் பணிக்கு 15.06.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரா், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.62% அதிகம் |
| 2. திரு.P.முருகன், ஒப்பந்ததாரா், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவு |

(ந.க.எண்: 139/2017/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. இப்பணிக்கு நகரமன்றம் தனது 28.03.2018 தேதியிட்ட 68 ஆம் எண் தீா்மானத்தில் மதிப்பீடு ரூ.1,20,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.07% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திரு.P.முருகன், ஒப்பந்ததாரர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 23**

வார்டு எண்:11 பொள்ளாச்சி சாலையில் குடிநீர், போர்வெல் குழாய்கள் மற்றும் சிமெண்ட் குழாய் பதிக்கும் பணிக்கு 15.06.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. திருமதி.V.கோமதி, ஒப்பந்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.47% குறைவு |
| 2. திரு.P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.05% அதிகம் |

(ந.க.எண்: 139/2017/இ1)

**அலுவலக குறிப்பு :**

1. இப்பணிக்கு நகரமன்றம் தனது 28.03.2018 தேதியிட்ட 50 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரூ.2,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.47% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திருமதி.V.கோமதி, ஒப்பந்ததாரர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 24**

வார்டு எண்:13 மேற்கு பல்லடம் அங்கன்வாடி கட்டிடத்தை சுற்றிலும் சுற்றுச்சுவர் மற்றும் கிரில் கதவு அமைத்தல் பணிக்கு 15.06.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. திருவாளர்கள்.D.R.கன்ஸ்ட்ரக்ஸன், ஒப்பந்ததாரர், ஒட்டன்சத்திரம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.51% அதிகம் |
| 2. திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.27% குறைவு |

(ந.க.எண்: 139/2017/இ1)

**அலுவலக குறிப்பு :**

1. இப்பணிக்கு நகரமன்றம் தனது 30.05.2018 தேதியிட்ட 104 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரூ.1,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.27% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரா் அவா்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலா் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 25**

வாா்டு எண்:07 இராயா்பாளையம் பகுதியில் மையத்தடுப்பு விளக்குகள் அமைக்கும் பணிக்கு 15.06.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பாா்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. திருவாளா்கள்.ஆா்விஜி மெட்டல் இன்ட்ரஸ்ட்ரீ, கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவு |
| 2. திருவாளா்கள்.சி ஆா் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.44% அதிகம் |

(ந.க.எண்: 139/2017/இ1)

**அலுவலக குறிப்பு :**

1. இப்பணிக்கு நகரமன்றம் தனது 30.05.2018 தேதியிட்ட 102 ஆம் எண் தீா்மானத்தில் மதிப்பீடு ரூ.10,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.12% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளா்கள்.ஆா்விஜி மெட்டல் இன்ட்ரஸ்ட்ரீ, கோவை அவா்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலா் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 26**

வாா்டு எண்:11 பொள்ளாச்சி சாலையில் உள்ள உயா்நிலைப் பள்ளி அருகிலிருந்து உடுமலைப் பிாிவு மற்றும் வாா்டு எண்:07 இராயா்பாளையம் மாாியம்மன் கோவில் அருகே மையத்தடுப்பு விளக்குகள் அமைக்கும் பணிக்கு 15.06.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பாா்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. திருவாளா்கள்.ஆா்விஜி மெட்டல் இன்ட்ரஸ்ட்ரீ, கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.14% குறைவு |
| 2. திருவாளா்கள்.சி ஆா் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.88% அதிகம் |

(ந.க.எண்: 139/2017/இ1)

**அலுவலக குறிப்பு :**

1. இப்பணிக்கு நகரமன்றம் தனது 30.05.2018 தேதியிட்ட 103 ஆம் எண் தீா்மானத்தில் மதிப்பீடு ரூ.10,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.14% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்.ஆர்விஜி மெட்டல் இன்ட்ரஸ்ட்ரீ, கோவை அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் : 27</u>

நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களுக்கு கம்பி வேலி அமைக்கும் பணிக்கு 15.06.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. திருவாளர்கள்.லதா கன்ஸ்ட்ரக்சன், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.43% குறைவு |
| 2. திருவாளர்கள்.D.R.கன்ஸ்ட்ரக்ஸன், ஒப்பந்ததாரர், ஒட்டன்சத்திரம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.10% அதிகம் |

(ந.க.எண்: 139/2017/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

1. இப்பணிக்கு நகரமன்றம் தனது 30.05.2018 தேதியிட்ட 105 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரூ.6,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.43% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திருவாளர்கள்.லதா கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 28**

பல்லடம் நகராட்சியில் 09.03.2018 மற்றும் 16.05.2018 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. எனவே ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.70,560 /- ஐ திருவாளர்கள். மாலை தமிழகம், நிறுவனத்திற்கு வழங்கவும், ரூ.37,800 /- ஐ திருவாளர்கள். கோவை மாலை முரசு, நிறுவனத்திற்கு வழங்கவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 29**

திரு.ஆர்.சுப்பிரமணியம் என்பவர் இந்நகராட்சிக்குட்பட்ட நில அளவை எண் 399/A,399/2B, 400/2B மற்றும் 401/1B கணபதி நகர் நாரணாபுரம் பகுதியில் திடக்கழிவு அமைப்பதற்கு இந்நகராட்சியில் நடவடிக்கை எடுத்த போது மேற்கண்ட இடத்தில் திடக்கழிவு பணிகள் செய்யக்கூடாது என சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு WP No : 12850/2018 என வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழக்கை இந்நகராட்சி சார்பாக எதிர்த்து வழக்காட சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.ஏழுமலை அவர்களிடம் ஒப்படைக்கவும், இவ்வழக்கிற்கு உண்டான தொகை ரூ. 15000/ - வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 30**

இந்நகராட்சி பயன்பாட்டிற்கு ஒரு லேப்டாப் மற்றும் HP லேசர் பிரிண்டர் ஆகியவைகளை வாங்க விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | ஸ்பைடர் டெக்னாலஜி, சேலம் | ரூ.164500 /- |
| 2 | சந்திரா ஹைடெக் , ஈரோடு | ரூ.167000 /- |
| 3 | ஹைபிரிட் கம்யூனிகேசன், திருப்பூர் | ரூ.168000/- |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்பைடர் டெக்னாலஜி , சேலம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கவும், அதற்காகும் செலவினத்தொகையை வழங்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்
பல்லடம் நகராட்சி